செ.வெ.எண் :657 நாள்: 07.10.2021

# தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது-கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் திரு.கே.பணீந்திர ரெட்டி இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை சார்பில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து அரசு அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் திரு.கே.பணீந்திர ரெட்டி இ.ஆ.ப. அவர்கள், மாவட்ட கண்காணிப்பு மற்றும் அரசு முதன்மைச் செயலர்/தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் திரு.எஸ்.விஜயகுமார் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.10.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தை கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் துவக்கிவைத்து பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழையை எதிர் கொள்ள அனைத்து மாவட்ட நிர்வாகமும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு தயார் நிலையில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார் கள். அதனடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான அனைத்து அரசு அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் இன்று நடத்தப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்ட அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு அனைத்து தகவல் தொடர்பு சாதனங்களுடன் சுழற்சி முறையில் பணியாளர்களை நியமித்து மீட்பு மற்றும் நிவாரண பணிகளை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும் பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சி துறை, மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம், பேரூராட்சிகள் மருத்துவத் துறை மற்றும் பொது சுகாதாரத் துறை, வருவாய் துறை, தீயணைப்பு துறை, நெடுஞ்சாலைத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கால்நடை பராமரிப்பு துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் மோட்டார் வாகன பராமரிப்பு துறை ஆகிய அனைத்து துறை அலுவலர்களும் பேரிடர் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை எல்லா வகையிலும் சமாளிப்பதற்கும் நிவாரண பணிகளில் எந்தவித தொய்வும் ஏற்படாத வகையிலும் உயிர்சேதம் கால்நடை சேதம் ஆகியவை ஏற்படாதவாறு தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அனைத்து துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருக்க

அறிவுறுத்தப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 195 மழை வெள்ளத்தால் பாதிக்கப் படக்கூடிய பகுதிகள் என கண்டறியப்பட்டு அந்த இடத்திற்கு தேவையான நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை மூலம் 1169 கிலோமீட்டர் நீலமும், மாநகராட்சி, நகராட்சி மூலமாக 1069 கிலோமீட்டர் நீலமும் தூரத்திற்கு மழைநீர் வடிகால் வாய்க்கால் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பின்னர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 19 பயனாளிகளுக்கு ரூ.5,82,960 லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள், மாவட்ட கண்காணிப்பு மற்றும் அரசு முதன்மைச் செயலர்/தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் அவர்கள் வழங்கினார்கள்.

முன்னதாக, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மை செயலாளர்/ தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் அவர்கள் திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோணகடுங்கலாற்றில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு பொதுப்பணித் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளையும், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் நாகத்தி ஊராட்சி மற்றும் திருவையாறு ஊராட்சி ஒன்றியம் வெள்ளாம் பெரம்பூர் ஊராட்சியில் இயங்கி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல்லின் ஈரப்பதம் தன்மை குறித்து கருவி மூலம் பரிசோதனை செய்யும் பணியினையும், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் நாற்பத்தி ஊராட்சியில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்தில் பயிலும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு தரமாக உள்ளதா என்பது குறித்தும் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்று வரும் கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாம் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் திருமதி. ரவளி ப்ரியா கந்தபுணணி இ.கா.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) மரு.என்.ஓ.சுகபுத்ரா இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.H.S.ஸ்ரீகாந்த் இ.ஆ.ப., துணை ஆட்சியர் பயிற்சி திரு. கௌஷிக் இ.ஆ.ப., , மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**